முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 770**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.11.2021, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மசக்தியே அரங்கா போற்றி
தவசியாக வாழும் தேசிகா போற்றி
பெருமை கொண்ட தர்ம லோகம் படைக்க
பேர் அன்னதானத்தை துவக்கி சேவை ஆற்றுகின்ற
2. ஆற்றுகின்ற அண்ணலே அரங்கனே உந்தனுக்கு
ஆறுமுகப்பெருமான் யானும் இனிதே
மாற்றம் உலகில் நடக்க ஞான அறிவுரை ஆசி
மொழிகுவேன் பிலவ துலை திங்கள் தன்னில்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 21ம் நாள், 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுள் என்பலம்
தவமாக தர்மமாக தனித்துவமாக நிரம்பிவர
வருகவே இந்த சக்திநிலை பெருகபெருக வடிவேலன் என்வெளிப்பாடாக உலகில் சடுதிகண்டு
ஆறுமுக சரவண சுடர் சக்தி வழி அகிலமே ஞானஒளி பெற்று இனிதே
4. இனிதே இந்த உலக மாற்றம்
ஏழாம் படை வீட்டின் அரங்கன் ஞானத்தின் மூலமாக அரங்கேறும்
ஞானசக்தியாக அரங்கனுக்கு நித்தம் நித்தம்
நல்மாற்றங்கள் பல அடுக்கடுக்காய் ஆறுமுகன் நிகழ்த்தி வர
5. வருகின்ற இந்த அற்புதத்தின் மூலம்
வையகம் பெருமாற்றம் பெறும்
தருகின்ற அரங்கன் உபதேசமே
தரணிக்கு வேதமாக மாறக்கூடும்
6. கூடவே தொண்டர் படை பெருக்கி
குவலயத்தில் ஆறுமுகன் வழி அற்புதத்தை
அரங்கன் வழி அற்புதத்தை
ஆறுமுகன் யான் நடத்தி வருக
7. வருகவே உலகோர் வந்திணைய ஓங்காரக்குடிலில்
வையகம் சடுதி மாற்றம் பெறும்
தருகின்றேன் அரங்கனுக்குள் பெரும் சக்தியை தவசித்தியாக
தர்மமகா சூட்சும பலமாக

ஆறுமுகன் யான் விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–